**செய்தி வெளியீடு எண் : 198** **நாள்: 01.02.2022**

<u>செய்தி வெளியீடு</u>

**<u>இலங்கைக் கடற்படையினரால் சிறைபிடிக்கப்பட்டுள்ள 21 மீனவர்கள் மற்றும் 2 விசைப்படகுகளை உடனடியாக விடுவிக்கத் தேவையான நடவடிக்கைகளை எடுக்கக் கோரி, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள், மாண்புமிகு ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் அவர்களுக்குக் கடிதம்</u>**

இந்தியா மற்றும் இலங்கை மீனவர்களுக்கு இடையே உள்ள நீண்டகால பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணவும், இலங்கைக் கடற்படையினரால் சிறைபிடிக்கப்பட்டுள்ள 21 மீனவர்கள் மற்றும் 2 விசைப்படகுகளை உடனடியாக விடுவிக்கத் தேவையான நடவடிக்கைகளை எடுக்க வெளியுறவு அமைச்சகத்திற்கு உத்தரவிடமாறு கோரியும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள், மாண்புமிகு ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் திரு.ஜெய்சங்கர் அவர்களுக்கு இன்று (1-2-2022) கடிதம் எழுதியுள்ளார்.

அக்கடிதத்தில், நாகப்பட்டினம் மாவட்டத்திலிருந்து 31-1-2022 அன்று 12 மீனவர்கள் IND-TN-06-MM-7747 என்ற பதிவு எண் கொண்ட மீன்பிடி விசைப்படகில் நாகப்பட்டினத்திலிருந்து தென்கிழக்கே மீன்பிடித்துக் கொண்டிருந்த பொழுது இலங்கைக் கடற்படையினரால் சிறைபிடிக்கப்பட்டு, இலங்கையில் உள்ள காங்கேசன்துறை கடற்படைத் தளத்திற்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளனர் என்றும், அதேபோன்று, காரைக்கால், புதுச்சேரியைச் சேர்ந்த IND-PY-PK-MM-1139 என்ற பதிவு எண் கொண்ட மற்றொரு மீன்பிடிப் படகில் மீன்பிடிக்கச் சென்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த 6 மீனவர்கள் மற்றும் புதுச்சேரியைச் சேர்ந்த 3 மீனவர்களுடன் இலங்கைக் கடற்படையினரால் சிறைபிடிக்கப்பட்டுள்ளனர் என்றும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெரிவித்துள்ளார்.

2021 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் நடைபெற்ற 3 சம்பவங்களில், 68 தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டு, தமிழகம் மற்றும் ஒன்றிய அரசு மேற்கொண்ட கடும் முயற்சிக்குப் பிறகு சமீபத்தில் விடுவிக்கப்பட்டு, தாயகம் திரும்பக் காத்திருக்கிறார்கள் என்றும், இந்நிலையில், தமிழக மீனவர்கள் மீண்டும் இலங்கைக்

கடற்படையால் கைது செய்யப்பட்டுள்ள சம்பவம், மீனவ மக்களிடையே பீதியையும், கொந்தளிப்பையும் ஏற்படுத்தியுள்ளது என்றும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கைச் சிறைகளில் உள்ள நமது மீனவர்கள் நீண்டகாலமாக சிறையில் அடைக்கப்படுவது, மீனவர்களையும் அவர்களது குடும்பத்தினரையும் சொல்லொணாத் துயரத்திற்கு ஆளாக்குவதோடு, அக்குடும்பங்களும் வறுமையில் தள்ளப்படுகின்றன என்று குறிப்பிட்டுள்ள மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இந்த விவகாரத்தில் உடனடியாகத் தலையிட்டு இந்தியா மற்றும் இலங்கை மீனவர்களுக்கு இடையே உள்ள இந்த நீண்டகாலப் பிரச்சினையை நிரந்தரமாகத் தீர்க்க, உறுதியான வழிமுறைகளைப் பின்பற்றிட கேட்டுக் கொண்டுள்ளார். மேலும் சிறைபிடிக்கப்பட்டுள்ள 21 மீனவர்கள் மற்றும் 2 விசைப்படகுகளை உடனடியாக விடுவிக்கும் வகையில், தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு மாண்புமிகு ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

- - - - -

**P.R.No:198** **Date:01.02.2022**

**Text of D.O. Letter Dated 1-2-2022 of Hon'ble Chief Minister of Tamil Nadu to Hon'ble Union Minister of External Affairs requesting to resolve long standing issue between fishermen of India and Sri Lanka:**

This is to bring a very disturbing incident to your notice, wherein 12 fishermen hailing from Tamil Nadu were apprehended by the Sri Lankan Navy on 31.1.2022 while they were fishing Southeast of Nagapattinam coast and taken to the Kangesanthurai Naval base, Sri Lanka. They were sailing in a Mechanized Fishing vessel bearing Registration No.IND-TN-06-MM-7747 that left Nagapattinam on 29.1.2022. It is also understood that another mechanized fishing boat bearing Registration No.IND-PY-PK-MM-1139 from Karaikal, Puducherry UT was also apprehended by Sri Lankan Navy with 6 fishermen who belong to Tamil Nadu and 3 fishermen from Puducherry.

I would like to bring to your notice that in the month of December, 2021, 68 Tamil Nadu fishermen were apprehended in 3 incidents by Sri Lankan Navy and were released recently after strenuous efforts taken by Tamil Nadu and Union Government and are still awaiting repatriation. In this situation, the present incident of arrest of Tamil Nadu fishermen by Sri Lankan Navy sends panic and shock among the fishermen community.

Prolonged incarceration of our fishermen in the Sri Lankan Jails is subjecting them and their families back home to untold misery and many of the families are being pushed into abject poverty in the absence of their sole bread winner.

I urge your personal intervention in this matter and request the Union of India to find tangible mechanisms to permanently resolve this long standing issue between fishermen of India and Sri Lanka. I also request you to take up the present matter with the Sri Lankan authorities urgently to secure the immediate release of 21 fishermen and their fishing boats from Sri Lankan custody.

------

**Issued By: - DIPR, Secretariat, Chennai - 9.**